முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1198

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.01.2023**, திங்கட்கிழமை

1. அருளதை மீட்க வந்த வள்ளலே
பரமானந்த ஞான சதா சிவ சற்குருவே
பேருலகம் உன் அவதார பலத்தின் வழியே
புண்ணிய பூமியாக மாறி யுகமாற்றம் நடந்தேறும் எனக்கூறி
2. கூறியே சுப்ரமணியர் யானும் இனிதே
குவலயத்தில் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்பட இனிதே சுபகிருது சிலை திங்களில்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 25 ம் நாள் 09.01.2023, திங்கட்கிழமை)
அருளுவேன் தொடர்ந்து அரங்கன் சக்தி பெருக
3. பெருகவே அரங்கனால் இந்த கலியுகத்தில்
பிசகின்றி உலகமாற்றம் நடந்தேறும்
வரங்கள் தந்து அரங்கனுள் யானிருக்க
வையகத்தில் இந்த அற்புதம் சடுதி காணும்
4. காணவே அரங்கன் சீடர்கள் என
கலிதனில் இணைந்த மக்களெல்லாம்
ஞானவான்களாக மாற்றங்கண்டு
ஞானயுகமாற்றம் நடத்தி மகிழ்வர்
5. மகிழவே ஞானிகள் ஆட்சியாம்
மக்களை காக்கும் ஞானஆட்சியும்
அகிலமெங்கும் அரங்கன் சக்தி வழி பரவி
அற்புதம் அரங்கன் சீடர்களைக்கொண்டே நடந்தேறக்கூடும்
6. ஆகவே இந்தவித பெருமாற்றத்தை
அரங்கனுக்குள் யானிருந்து நடத்த இருக்க
ஜெகத்தோர் அரங்கன் குடில் நோக்கி
சேர்ந்துவந்து அரங்கன் வழி சரணாகதி கொண்டு
7. கொண்டுமே தொடர்ஞானம் பயில
குவலயமே ஞான லோகமாக மாற்றம் பெறும்
உண்டான தடைகளெல்லாம் நீங்கி
உலகினில் சடுதி அற்புதம் நிகழும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–